இவை அரசாங்கம் கொள்கை முடிவாக எடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகள். இவை, ஒரு சாதாரண டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர் அல்லது அசிஸ்டென்ட் எஜுகேஷனல் ஆபீசரால் எடுக்கப்படுகிற முடிவுகள் அல்ல. ஆகவே நான் இந்தப் பிரச்சினைகள் அரசாங்கத்தினிடத்திலே பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிற பிரச்சினைகள். இவற்றுக்கு உடனடியாக நாம் பதில் சொல்ல முடியாது. தக்க நேரத்திலே அதை ஆய்வு செய்து, முடிவுகள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) *1991*-ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் நாள் சென்னை டி.பி. சத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் ஒரு வீட்டின் பகுதிகள் இடிந்து போனது மற்றும் மற்ற குடியிருப்புகள் சீர்கேடான நிலையில் உள்ளதைச் சீர்செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் நாள் சென்னை டி.பி. சத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் ஒரு வீட்டின் பகுதிகள் இடிந்துபோனது மற்றும் மற்ற குடியிருப்புகள் சீர்கேடான நிலையில் உள்ளதைச் சீர் செய்வது குறித்துச்" மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை.

தாண்டவராய சத்திர குடிசைப்பகுதி மாற்று வாரிய திட்டப் பகுதியில் 1971ம் வருடம் கட்டப்பட்ட ஒரு குடியிருப்பின் பின்புற கான்கிரீட் தளத்தின் ஒரு பகுதி அதனுள் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் நாளடைவில் துருப்பிடித்ததால் திடீரென

1991 அக்டோபர் 3] [திரு. டி. எம். செல்வகணபதி]

8-9-1991 அன்று பழுதடைந்து விழுந்தது. ஏற்கெனவே இரு வருடங்களுக்கு முன் அப்பகுதியில் பூசு வேலை செய்யப்பட்டது. தற்போது அப்பகுதியில் பழுது பார்க்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இக்கட்டிட வடிவமைப்பில் கழிவறைக்குச் செல்வதற்காக போடப்பட்ட பின்புற முகப்பை (balcony) எடுத்து விட்டு குடியிருப்பினுள்ளேயே அமைந்துள்ள குளியலறைப் பாதையைக் கழிவறைக்கும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தற்போது பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இவ்வாறு செய்வதால் பல வருடங்களுக்கு முன்பே போடப்பட்ட பழுதுபட்ட தொங்கு முகப்புகள் தவிர்க்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஒரு வீடு இடிந்து 4 பேர்கள் இறந்து போனார்கள். மீண்டும் அந்தப் பகுதியில் ரிப்பேர் செய்வதாக அமைச்சரவர்களின் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தகைய பகுதிகள் மிக மோசமாக இருந்தால் அவற்றை இடித்துக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ? மேலும் இத்தகைய சம்பவங்கள் நடக்கும்போது அந்தக் காண்ட்ராக்டரும், என்ஜினியரும்தான் பொறுப்பு என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களால் குறிப்பிடப்பட்ட வாரிய திட்டப் பகுதியில் இந்தக் கட்டிடம் 1971 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. சில இரும்புக் கம்பிகள் நாளடைவில் துருப்பிடித்த காரணத்தால், அங்கே பழுதடைந்து சிறிது சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் முறையாகச் சரி செய்வதற்கு அங்கு பொறியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, சீர் செய்யப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிகழ்வுகள் மேலும் நடைபெறாமல் இருப்பதற்கு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய குடிசை மாற்று வாரிய கட்டிடங்கள் எல்லாம் இந்தமாதிரித்தான் இருக்கும் நிலைமை இருக்கிறது. இதை எல்லாம் அரசு உணர்ந்து, அந்தப் பகுதிகளில் எல்லாம் உண்மையிலேயே அந்த வீடுகள் சரியாக இருக்கிறதா என்று பார்க்க ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட பிரச்சினை

[திரு. டி. எம். செல்வகணபதி] [1991 அக்டோபர் 3

ஏற்கெனவே அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. கூடிய விரைவிலே அனைத்துக் கட்டிடப் பகுதிகளும் சீரமைக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் 1991-92 ஆம் ஆண்டுக்கான பதினெட்டாவது, பத்தொன்பதாவது, இருபதாவது மற்றும் இருபத்தொன்றாவது அறிக்கைகளை அளிப்பார்.

முற்பகல் 10-40

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நமக்குக் கொடுத்த தெம்பாலும், ஆசியாலும் பொது நிறுவனங்கள் குழுவின் மாண்புமிகு உறுப்பினர்களின் நல்லாதரவுடனும், குழு அலுவலர்களின் உண்மையான ஒத்துழைப்புடனும் குழுவின் 18, 19, 20 மற்றும் 21-வது அறிக்கையை இன்று இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

இந்தியத்தணிக்கைத் துறைத் தலைவரின் 1983-84 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) தமிழ்நாடு மின்சார வாரியம் எரிபொருள் சிக்கனம் தொடர்பான பத்திகள் குறித்த குழுவின் 18-வது அறிக்கை ;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்) எண் 4/1989, தொழிலாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்புத் துறை தொடர்பான பத்தி குறித்த குழுவின் 19-வது அறிக்கை ;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1988 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) எண். 4/1989 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை தொடர்பான பத்தி மீதான குழுவின் 20-வது அறிக்கை; மற்றும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.